# ஐ.நா., பன்னாட்டு அமைப்புகளில் சீர்திருத்தம்

## ஜி20 உச்சி மாநாட்டில் பிரதமர் மோடி வலியுறுத்தல்



தில்லியில் நடைபெற்ற ஜி20 உச்சி மாநாட்டின் நிறைவு அமர்வில் 'ஒரே எதிர்காலம்' என்ற தலைப்பில் ஞாயிற்றுக்கிழமை பேசிய பிரதமர் நரேந்திர மோடி.

**புது தில்லி, செப். 10:** ஐ.நா. உள்ளிட்ட பன்னாட்டு அமைப்புகளில் சீர்திருத்தங்களைப் புகுத்த வேண்டியது அவசியம் என ஜி20 உச்சி மாநாட்டில் பிரதமர் நரேந்திர மோடி வலியுறுத்தினார்.

தில்லியில் ஜி20 கூட்டமைப்பின் உச்சி மாநாடு தொடர்ந்து 2-ஆவது நாளாக ஞாயிற்றுக்கிழமையும் நடைபெற்றது. 'ஒரே எதிர்காலம்' என்ற தலைப்பிலான 3-ஆவது மற்றும் இறுதி அமர்வில் பிரதமர் மோடி பேசியதாவது:

மாறி வரும் காலத்துக்கு ஏற்ப மாறாமல் இருக்கும் எதுவும் முக்கியத்துவத்தை இழந்துவிடும் என்பதே இயற்கை விதி. உலகம் எதிர்கொண்டு வரும் புதிய எதார்த்த சூழலை எதிரொலிக்கும் வகையில் பன்னாட்டு அமைப்புகள் திகழ வேண்டும்.

புதிய சவால்களுக்குத் தீர்வு காணும் வகையிலும் எதிர்காலத்தை நோக்கியும் உலக நாடுகளைப் பன்னாட்டு அமைப்புகள் வழிநடத்த வேண்டும்.

ஐ.நா. அமைப்பு உருவாக்கப்பட்டபோது உலகின் சூழல் வேறு மாதிரியாக இருந்தது. 51 நாடுகளுடன் ஐ.நா. தோற்றுவிக்கப்பட்டது. ஆனால், ஐ.நா. உறுப்பு நாடுகளின் எண்ணிக்கை தற்போது 200-ஐ நெருங்கியுள்ளது. அப்படியிருந்தும், ஐ.நா. பாதுகாப்பு கவுன்சிலில் நிரந்தர உறுப்பினர்களின் எண்ணிக்கை மாறவில்லை.

பல்வேறு விவகாரங்களில் சர்வதேச சூழல் மாறிவிட்டது. போக்குவரத்து, தொலைத்தொடர்பு, சுகாதாரம், கல்வி உள்ளிட்ட பல்வேறு துறைகள் பெரும் மாற்றம் கண்டுள்ளன. ஆனால், அத்தகைய மாற்றங்களை ஐ.நா. உள்ளிட்ட பன்னாட்டு அமைப்புகள் தற்போது பிரதிபலிக்கவில்லை. நவீன உலகின் கட்டமைப்புகளைப் பன்னாட்டு அமைப்புகள் பிரதிபலிக்க வேண்டியது அவசியம்.

**பிராந்திய அமைப்புகளின் வளர்ச்சி:** கடந்த சில ஆண்டுகளாகப் பல்வேறு பிராந்திய அமைப்புகள் தோன்றி வருகின்றன. அவை சர்வதேச சூழலை சிறந்த முறையில் பிரதிபலிப்பதோடு திறம்படவும் செயல்பட்டு வருகின்றன. மாற்றங்களுக்கு வழிவகுக்க வேண்டும் என்ற நோக்கிலேயே ஜி20 கூட்டமைப்பில் ஆப்பிரிக்க ஒன்றியம் இணைத்துக் கொள்ளப்பட்டது. பன்னாட்டு அமைப்புகளில் காலத்துக்கு ஏற்ப சீர்திருத்தங்களை மேற்கொள்ள வேண்டும் என்பதன் அடிப்படையிலேயே அந்த வரலாற்றுச் சிறப்புமிக்க முடிவு எடுக்கப்பட்டது.

அதேபோல், பன்னாட்டு வளர்ச்சி வங்கிகளின் செயல்பாடுகளிலும் சீர்திருத்தங்கள் புகுத்தப்பட வேண்டும். அத்தகைய சீர்திருத்தங்கள் உடனடியாகவும் திறம்படவும் மேற்கொள்ளப்பட வேண்டும்.

**இணையப் பாதுகாப்பு:** உலக நாடுகள் தற்போது எதிர்கொண்டு வரும் முக்கியப் பிரச்னைகள் இணையவழி குற்றச் செயல்களும் கிரிப்டோ கரன்சிகளும் ஆகும். அந்தப் பிரச்னைகள் உலகின் ஒட்டுமொத்த எதிர்காலத்தையும் பாதிக்கவல்ல ஆற்றல்மிக்கவை. சமூக அமைப்பு, நிதி நிலைத்தன்மை ஆகியவற்றுக்கு கிரிப்டோ கரன்சி பாதிப்பை ஏற்படுத்த வாய்ப்புள்ளது. அவற்றை ஒழுங்குபடுத்துவதற்கான சர்வதேச விதிமுறைகள் உருவாக்கப்பட வேண்டியது அவசியம்.

பயங்கரவாதத்துக்கு நிதி திரட்டுவதற்கு இணையம் தற்போது அதிகமாகப் பயன்படுத்தப்பட்டு வருகிறது. அதைத் தடுப்பதற்கும் இணையவழிப் பாதுகாப்பை உறுதி செய்வதற்கும் சர்வதேச ஒத்துழைப்பு அவசியம். ஒவ்வொரு நாட்டின் பாதுகாப்பையும் வளர்ச்சியையும் உறுதி செய்வதற்கு இணையவழிப் பாதுகாப்பு மிகவும் அவசியம்.

**தொழில்நுட்ப வளர்ச்சி:** ஒவ்வொரு நாட்டின் பாதுகாப்பு குறித்தும் மற்ற நாடுகள் சிந்திக்கத் தொடங்கும்போது 'ஒரே எதிர்காலம்' என்ற சிந்தனை வலுப்படும். நவீன தொழில்நுட்பங்களின் வளர்ச்சி அபரிமிதமாகவும் கற்பனைக்கு எட்டாத வகையிலும் உள்ளது. செயற்கை நுண்ணறிவு அதற்குச் சிறந்த எடுத்துக்காட்டு. செயற்கை நுண்ணறிவு உள்ளிட்ட பல்வேறு தொழில்நுட்பங்கள் சார்ந்த விவகாரங்களில் உலக நாடுகள் ஒருங்கிணைந்து செயல்படுவது அவசியம்.

'மக்களை மையப்படுத்திய பொறுப்புமிக்க செயற்கை நுண்ணறிவு நிர்வாகம்' என்ற திட்டம் முன்மொழியப்படுகிறது. அத்திட்டத்தின் கீழ் சமூகப் பொருளாதார வளர்ச்சிக்கும் முறையான ஆராய்ச்சி நடவடிக்கைகளுக்கும் செயற்கை நுண்ணறிவு தொழில்நுட்பம் பயன்படுத்தப்படுவது உறுதி செய்யப்பட வேண்டும்.

**கண்ணோட்டத்தில் மாற்றம்:** மொத்த உள்நாட்டு உற்பத்தியை (ஜிடிபி) மையமாகக் கொண்ட கண்ணோட்டத்தில் இருந்து மக்களை மையப்படுத்திய கண்ணோட்டத்துக்கு உலக நாடுகள் மாற வேண்டும். நிலவுக்கு இஸ்ரோ அனுப்பிய சந்திரயான்-3 விண்கலத்தின் மூலம் கிடைத்த தரவுகளை மனித சமூகத்தின் நலனுக்காக மற்ற நாடுகளுடனும் பகிர்ந்து கொள்ள இந்தியா தயாராக உள்ளது.

மக்களை மையப்படுத்திய வளர்ச்சிக்கு முக்கியத்துவம் அளிக்கும் இந்தியாவின் கொள்கையையும் இது வெளிக்காட்டுகிறது. வேகமாக மாறி வரும் உலகத்துக்கு ஏற்ப மாற்றங்களுடன் நிலைத்தன்மையும் நீடித்த வளர்ச்சியும் அவசியம் என்றார் பிரதமர் மோடி.

> 'ஜிடிபி-யை மையமாகக் கொண்ட வளர்ச்சிக் கண்ணோட்டம் தற்போதைய சூழலுக்கு உகந்ததாக இல்லை. மக்களை மையப்படுத்திய வளர்ச்சிக் கண்ணோட்டத்துக்கு முக்கியத்துவம் அளிப்பதற்கான காலம் வந்துவிட்டது. அதைக் கருத்தில்கொண்டு இந்தியா பல்வேறு நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகிறது. முக்கியமாக, தரவு, தொழில்நுட்ப விவகாரங்களை இந்தியா தொடர்ந்து பகிர்ந்து வருகிறது.
> செயற்கை நுண்ணறிவு தொழில்நுட்பத்தை சமூகப் பொருளாதார வளர்ச்சிக்குப் பயன்படுத்த வேண்டும். நீடித்த, நிலையான வளர்ச்சியை உறுதி செய்வது, விளிம்புநிலை மக்களின் முன்னேற்றத்துக்கு வழிவகுக்கும்'.
>
> – 'எக்ஸ்' சமூக வலைதளப் பதிவில் பிரதமர் மோடி

### பிரேஸிலிடம் தலைமைப் பொறுப்பு



தில்லியில் நடைபெற்ற ஜி20 உச்சி மாநாடு ஞாயிற்றுக்கிழமை நிறைவடைந்த நிலையில், அக்கூட்டமைப்பின் தலைமைப் பொறுப்பானது பிரேஸிலிடம் ஒப்படைக்கப்பட்டது.

ஜி20 கூட்டமைப்புக்கான தலைமைப் பொறுப்பானது ஆண்டுதோறும் சுழற்சி முறையில் ஒவ்வொரு நாட்டிடம் ஒப்படைக்கப்படும். அதன்படி, அக்கூட்டமைப்பின் தலைமைப் பொறுப்பை இந்தோனேசியாவிடமிருந்து கடந்த ஆண்டு இந்தியா பெற்றது. கடந்த ஆண்டு டிசம்பர் 1-ஆம் தேதியில் இருந்து இந்தியா அதிகாரபூர்வமாக ஜி20 கூட்டமைப்புக்குத் தலைமை வகித்து வருகிறது.

ஜி20 கூட்டமைப்பு நாடுகளின் தலைவர்களுக்கான உச்சி மாநாடு தில்லியில் சனிக்கிழமை (செப். 9) தொடங்கியது. மொத்தம் 3 அமர்வுகளாக நடைபெற்ற மாநாடு, ஞாயிற்றுக்கிழமை நிறைவடைந்தது.

அதையடுத்து, ஜி20 கூட்டமைப்பின் தலைமைப் பொறுப்பை பிரேஸில் அதிபர் லூலா டாசில்வாவிடம் பிரதமர் நரேந்திர மோடி ஒப்படைத்தார். வரும் டிசம்பர் 1-ஆம் தேதியில் இருந்து ஜி20 கூட்டமைப்பின் தலைமைப் பொறுப்பை பிரேஸில் அதிகாரபூர்வமாக ஏற்கும்.

விரிவான செய்தி உள்ளே

# நூற்றாண்டை நோக்கி...

மகாகவி சுப்பிரமணிய பாரதியாரின் 13-ஆவது நினைவு நாளன்று உயரிய பல லட்சியக் கோட்பாடுகளுடன் 1934-ஆம் ஆண்டு உதயமான உங்கள் 'தினமணி', தனது இதழியல் சேவையில் 90-ஆவது ஆண்டில் இன்று அடியெடுத்து வைக்கிறது. 'நிமிர்ந்த நன்னடையுடனும், நேர்கொண்ட பார்வையுடனும், நிலத்தில் யார்க்கும் அஞ்சாத நெறிகளுடனும்' தனது இதழியல் பயணத்தைத் தளராமல் தொடர்வதற்கு பேராதரவும், உறுதுணையும் அளித்து வரும் வாசகர்களுக்கு எத்துணை நன்றி சொன்னாலும் போதாது.

உலகில் எந்தவொரு நாளிதழும் தனக்கென குறிப்பிட்ட இலக்கையும், கொள்கையையும், லட்சியத்தையும் அறிவித்துத் தொடங்கப்பட்டதில்லை. 1934-ஆம் ஆண்டு செப்டம்பர் 11-ஆம் தேதி அரையணா விலையில் எட்டு பக்கங்களுடன் வெளிவந்த நமது 'தினமணி' நாளிதழின் முதல் பக்கத்திலேயே அதன் நோக்கமும், உறுதியும் வெளியிடப்பட்டிருந்தது. 'ஏழை துயர் தீர்க்க, எல்லோரும் களித்திருக்க, வெறுக்கும் அஞ்சாத தினமணி' என்கிற வாசகம், அந்த நாளிதழின் குறிக்கோளையும், தன்னம்பிக்கையையும் தெளிவுபடுத்தியது.

'தினமணி' என்றால் அது கதிரவனைக் குறிக்கும். 'தினமணி' நாளிதழின் விளம்பரத்திலேயே, 'பாரதியார் நீடூழி வாழ்க, தினமணி நீடூழி வாழ்க' என்று குறிப்பிடப்பட்டிருந்தது. 'இந்த தேசிய நாளிதழ் எந்தக் கட்சியையும் சார்ந்ததல்ல என்பதையும், சுயநல நோக்கமில்லாமல் மக்களுக்குச் சொந்தமான ஒரே பத்திரிகை' என்றும் அந்த விளம்பரத்தில் வாசகங்கள் காணப்பட்டன.

இந்திய சுதந்திர வேள்வியின் லட்சியக் கனவுகளையும், பாரத தேசப் பெருமையையும், தமிழ் மொழிப் பற்றையும் தனது மரபணுவில் தாங்கி, தொடங்கிய நாள் முதல் அகவை 90-இல் அடியெடுத்து வைக்கும் இந்தத் தருணம் வரை 'தினமணி' பீடுநடை போடுகிறது. ஒவ்வொரு தமிழனின் உணர்வையும், ஒவ்வோர் இந்தியனின் எதிர்பார்ப்பையும், மனித இனத்தின் நம்பிக்கையையும் பிரதிபலிக்கும் நாளிதழாக 'தினமணி' வெளிவர வேண்டும் என்பதை அதன் தலைமைப் பொறுப்பில் இருந்த ஆசிரியர்கள் அனைவரும் உறுதி செய்யத் தவறவில்லை. மனித நேயம், மக்களாட்சித் தத்துவம், உலக சகோதரத்துவம் ஆகியவற்றிற்காக தொடர்ந்து போராடும் இதழியல் குரலாக அன்று முதல் இன்று வரை ஒலித்துக் கொண்டிருக்கிறது 'தினமணி'.

'தினமணி'யின் முதல் நாள் ஆசிரியர் உரை, தனது கருத்தை ஆணித்தரமாக பதிவு செய்திருந்தது -

"இந்தியாவில் வசிக்கும் ஒவ்வொரு தமிழரும் தன்னைத் தமிழர் என்று பெருமையுடன் கூறிக்கொள்ளவேண்டும். நாட்டுக்கு வெளியே செல்லும்போது தன்னை இந்தியன் என்று பெருமையுடன் அழைத்துக்கொள்ள வேண்டும். தமிழர்கள் என்றால், தமிழ்நாட்டில் பிறந்த, தமிழ்நாட்டை தங்கள் வசிப்பிடமாகக் கொண்டு வாழும் ஹிந்து, முஸ்லிம், கிறிஸ்துவர்கள் மற்றும் தமிழ் பேசும் அனைவரும்தான்."

"எல்லா வியாதிகளிலும் மனோ வியாதியே மிகக் கொடியது. நமது மக்களின் மனத்தில் அடிமைத்தனம் குடிகொண்டிருக்கிறது. அதை அடியோடு அழித்து, தமிழ் மக்களை மானிகளாகச் செய்வதற்கு 'தினமணி' ஓயாது பாடுபடும்."

"மறுமலர்ச்சியின் அடையாளம் பாரதியார்தான். பாரத நாட்டின் இதர மாகாணங்களில் எல்லாம் தேசிய எண்ணம் பொங்கி எழுந்து கொண்டிருந்த காலத்தில் தமிழகம் மட்டும் உணர்வு குன்றியிருந்ததைக் காணச் சகியாது, தட்டியெழுப்பிய முன்னணி வீரர்கள் சிலரே. அவர்களுள் மகாகவி பாரதியாரே முக்கியமானவர்.

சுதந்திர சூரியனைக் காண விரும்பிய தெய்வீகப் பித்தராகிய சுப்பிரமணிய பாரதியாரின் வருடாந்திர தினத்தன்று அவருடைய சுதந்திர தாகத்தையும், சமத்துவக் கொள்கைகளையும் தமிழ்நாட்டில் பரப்பும் நோக்கத்துடன் வெளிவந்திருக்கும் தினமணியை தமிழ் மக்கள் மனமுவந்து வரவேற்பார்கள் என்பது எங்களின் பூரண நம்பிக்கை."

தனது பயணத்தைத் தொடங்கும்போது 'தினமணி' தனக்குத் தானே விதித்துக்கொண்ட அந்தக் குறிக்கோள்களில் இருந்து தடம்புரண்டுவிடாமலும், அடிப்படை இலக்கிலிருந்து விலகிவிடாமலும் இன்றுவரை தொடர்கிறது. இன்றைய தமிழ் சமுதாயம் எதிர்கொள்ளும் மிகப் பெரிய சவால், தமிழில் தவறில்லாமல் எழுதவும் பேசவும் தெரியாத புதியதொரு தலைமுறை உருவாகிக் கொண்டிருக்கிறது என்பதுதான். இயன்றவரை தமிழில் பேசுவது, எழுதுவது என்பதையும் தமிழுக்குப் புதிய பல வார்த்தைகளை அறிமுகப்படுத்தி செறிவூட்டுவது என்பதையும் இப்போது 'தினமணி' தனது இலக்குகளாக இணைத்துக் கொண்டிருக்கிறது.

மற்ற மொழிகளின் மீதான வெறுப்புணர்வைத் தூண்டாமல், தாய்மொழியாம் தமிழைப் போற்றி வளர்ப்பது; இன, மொழி, மத, ஜாதி அடிப்படையில் அமையும் எல்லாவிதமான துவேஷங்களையும், எதிர்மறைச் சிந்தனைகளையும் எதிர்த்துப் போராடுவது - இவற்றை 'தினமணி' தனது கடமையாகக் கருதுகிறது.

சமூக ஊடகங்களின் தாக்கம் சில நன்மைகளை ஏற்படுத்தியிருந்தாலும், வரைமுறையோ கட்டுப்பாடோ இல்லாத துவேஷப் பரப்புரைகள் அவற்றின் வாயிலாக வெளியிடப்படும் காலகட்டத்தில், சமுதாய நல்லிணக்கத்தையும், நாட்டுப்பற்றையும் தமிழ்த் தொண்டையும், ஆன்மிக கோட்பாடுகளையும் பாதுகாக்கும் கேடயமாக 'தினமணி' தனது இதழியல் கடமையில் தொடர்கிறது. அச்சு ஊடகம் எத்தனையோ இடர்ப்பாடுகளுக்கு இடையில் இயங்கும் நிலையிலும், வாசகர்களின் ஆதரவுடன் 90-ஆவது ஆண்டில் அடியெடுத்து வைக்கும் இந்தத் தருணத்தில், தனது முதல் இதழில் குறிப்பிட்ட கொள்கைகளுக்காகவும், குறிக்கோள்களுக்காகவும் 'தினமணி' தன்னை மீண்டும் அர்ப்பணித்துக் கொள்கிறது.

ஜனநாயகத்தின் குரலாகவும், தமிழனின் மனசாட்சியாகவும் திகழும் 'தினமணி'யின் நூற்றாண்டை நோக்கிய வெற்றிப் பயணம் உங்கள் நல்லாதரவுடன் தொடர்கிறது...

# நம்பிக்கையூட்டும் அரசுப் பள்ளிகள்

பெ. சுப்ரமணியன்

நாடு சுதந்திரம் அடைந்தபோது 12 சதவீத மக்கள் எழுத்தறிவு பெற்றிருந்தனர். இன்று அது 77 சதவீதத்துக்கு மேல் உயர்ந்துள்ளது. இதற்கு கல்வி பற்றிய விழிப்புணர்வுடன் அதிக அளவில் பள்ளிகள் திறக்கப்பட்டதும் காரணமாகும்.

ஒவ்வொரு மாநிலமும் கல்வியை மேம்படுத்த பல்வேறு முன்னெடுப்புகளை மேற்கொள்கின்றன. பள்ளிகளைப் பொறுத்தவரை பள்ளிக் கல்விக்காக ஒதுக்கப்படும் நிதி, பள்ளிகளின் எண்ணிக்கை, மாணவர் - ஆசிரியர் விகிதம், அடிப்படைவசதிகள் ஆகியவை கவனம் செலுத்தப்பட வேண்டிய அம்சங்களாகும்.

இந்தியாவில் மொத்தம் 14.30 லட்சம் பள்ளிகள் உள்ளன. இவற்றில் 97 லட்சம் ஆசிரியர்கள் பணிபுரிகின்றனர். 26.5 கோடி மாணவர்கள் பயில்கின்றனர். 2023-24-ஆம் நிதி ஆண்டில் மத்திய அரசு கல்வித் துறைக்கு ரூ.1.13 லட்சம் கோடி நிதி ஒதுக்கியுள்ளது. இது கடந்த நிதி ஆண்டுடன் ஒப்பிடுகையில் 8 சதவீதம் அதிகமாகும்.

தமிழ்நாட்டில் 58,801 பள்ளிகள் உள்ளன. தமிழக அரசு நடப்பு நிதி ஆண்டில் கல்விக்கு ரூ. 47,266 கோடி நிதி ஒதுக்கியுள்ளது. கடந்த நிதி ஆண்டில் பள்ளிக் கல்விக்கு ரூ. 36,895 கோடி நிதி ஒதுக்கப்பட்டது. கூடுதல் நிதி ஒதுக்கீட்டுடன் பல்வேறு திட்டங்களையும் செயல்படுத்தி வருகிறது. இந்தியாவில் கல்விக்கு அதிகப்படியான நிதி ஒதுக்கீடு செய்த மாநிலங்களில் தமிழ்நாடும் ஒன்றாகும்.

கொள்ளை நோய்த்தொற்றுக்கு முன்னதாக அரசுப் பள்ளிகளில் பயிலும் மாணாக்கர் எண்ணிக்கை குறைவாக இருந்தாலும் நோய்த்தொற்றால் ஏற்பட்ட பொருளாதார சூழலால் அரசுப் பள்ளிகளில் மாணாக்கர் எண்ணிக்கை அதிகரித்தது. அப்போது அனைத்து தரப்பினருக்கும் அரசுப் பள்ளிகளே அடைக்கலம் அளித்தன.

அவ்வாறு அதிகரித்த மாணவ மாணவியரை தக்க வைக்க அரசு பல்வேறு நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகிறது. மற்ற துறைகளைக் காட்டிலும் கல்வித் துறையில் அதிகத் திட்டங்கள் செயல்படுத்தப்படுகின்றன. குறைவான கட்டணம்,பல்வேறு சலுகைகள் என்றபோதும் அரசுப் பள்ளிகளில் சேர்க்கை பெற்ற மாணாக்கர்களை தக்க வைக்க முயற்சிகள் மேற்கொள்ள வேண்டியது சிந்திக்கவேண்டிய ஒன்றாகும்.

பிள்ளைகளைப் படிக்க வைக்க வேண்டும் என்ற விழிப்புணர்வு மக்களிடையே அதிகரித்து வருகிறது. அப்போது தனியார் பள்ளிகளே அவர்களின் முதல் தேர்வாக உள்ளது. நோய்த்தொற்றுக் காலத்திற்கு முன்பு வரையிலும் தங்கள் சொந்த கிராமங்களில் பள்ளி இருந்தபோதும் பிள்ளைகளை நகரங்களுக்கு அனுப்புவதும், கல்விக்காக நகரங்களுக்கு புலம் பெயர்வதும் அதிகமாக இருந்தது.

நோய்த்தொற்றுக்குப் பின்னர் இந்நிலை வெகுவாகக் குறைந்துள்ளது. இதற்கு பொருளாதார ரீதியான பாதிப்புகள் மட்டுமின்றி, அரசுப் பள்ளிகளின் குறிப்பிடத்தக்க வளர்ச்சியும் காரணமாகும். ஒவ்வோர் ஆண்டும் பத்தாம் வகுப்பு, பிளஸ் 2 பொதுத் தேர்வு முடிவுகளில் அரசுப் பள்ளி மாணாக்கர்களின் தேர்ச்சி விகிதம் அதிகரித்து வருவது குறிப்பிடத்தக்கதாகும்.

கிராமங்களில் கூட பள்ளிகள் நலனில் அக்கறை காட்டும் ஆசிரியர், பொதுமக்கள் எண்ணிக்கை அதிகரித்து வருகிறது. இதனாலும் கிராமப்புறங்களில் உள்ள அரசுப் பள்ளிகள் மேம்பாடு அடைந்து வருகின்றன. மேலும், அரசுப் பள்ளிகளின் மாணவியரின் எண்ணிக்கை அதிகரிக்க அரசின் சலுகைகள் அறிவிப்பு, புதுமைப் பெண் திட்டம் போன்றவையும் காரணங்களாகும்.

எல்லாவற்றுக்கும் மேலாக நிகழாண்டின் நீட் தேர்வு தேர்ச்சி விகிதம் அரசுப் பள்ளிகளின் மீதான நம்பிக்கையை அதிகரித்துள்ளது. தமிழகத்தின் நீட் தேர்ச்சி விகிதமும் மாணாக்கர்கள் பெற்ற மதிப்பெண்களும் தேசிய அளவில் கவனம் பெற்றுள்ளது. தேசிய அளவில் முதலிடத்தையும் தரவரிசையில் முதல் 50 இடங்களில் 6 இடங்களையும் தமிழக மாணவர்கள் பெற்றுள்ளது மகத்தான சாதனையாகும்.

அரசுப் பள்ளி மாணாக்கர்களில் பலர் சிறப்பான மதிப்பெண்களுடன் தேர்ச்சி பெற்றுள்ளது அரசுப் பள்ளிகள் மீதான நம்பிக்கையை அதிகப்படுத்தியுள்ளது. அரசுப் பள்ளிகளில் பயின்ற 600-க்கும் மேற்பட்ட மாணாக்கர்களுக்கு மருத்துவம் படிப்பதற்கான வாய்ப்பு கிடைத்துள்ளது.

கடந்த 2017-18-இல் நீட் தேர்வில் பங்கேற்ற அரசுப் பள்ளி மாணவர்கள் 3,739 பேரில் 825 பேர் தேர்ச்சி பெற்றனர். இது 22.1 சதவீதமாகும். 2018-19-இல் குறைந்த அளவினரே தேர்ச்சி பெற்றனர். நோய்த்தொற்று காலத்தின்போது அதாவது 2019-20-இல் நீட் தேர்வில் பங்கேற்ற அரசுப் பள்ளி மாணாக்கர் எண்ணிக்கை வெகுவாகக் குறைந்தது.

அதனைத் தொடர்ந்து நீட் தேர்வில் பங்கேற்ற, தேர்ச்சி பெற்ற அரசுப் பள்ளி மாணாக்கர் எண்ணிக்கை அதிகரித்து வருகிறது. 2022-23-இல் நீட் தேர்வெழுதிய 12,997 மாணாக்கர்களில் 3,982 பேர் தேர்ச்சிபெற்றுள்ளனர். இது 30.6 சதவீதமாகும். இது பாமர மக்களிடையே மட்டுமின்றி அரசுப் பணியில் இருப்போர் மத்தியிலும் அரசுப் பள்ளிகள் மீதான நம்பிக்கையை அதிகரிக்கச் செய்துள்ளது.

முதன்மை உயர்கல்வி நிறுவனங்களில் தனியார் பள்ளி மாணவர்கள் அதிக அளவில் சேர்க்கை பெற்றுவந்த நிலை மாறிவருகிறது. அரசுப் பள்ளிகளில் பயின்று என்ஐடி, ஐஐடி போன்ற முதன்மை உயர்கல்வி நிறுவனங்களில் பயில்வோரின் எண்ணிக்கை ஆண்டுதோறும் அதிகரித்து வருகிறது. கடந்த ஆண்டு 75 மாணவர்கள் சென்ற நிலையில் நிகழாண்டில் 225 பேர் முதன்மை உயர்கல்வி நிறுவனங்களுக்குச் சென்றுள்ளனர்.

அரசுப் பள்ளிகளின் மீதான நம்பிக்கை மேலும் அதிகரிக்க அரசின் திட்டங்கள் அனைத்து அரசுப் பள்ளிகளிலும் செயல்படுத்தப்பட வேண்டும். குடிநீர், கழிவறை, விளையாட்டு மைதானம் போன்ற அடிப்படை வசதிகளை மேம்படுத்துவதுடன் மாணவர்களின் கற்றல் திறனை உயர்த்தும் நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்பட வேண்டும்.

தனிப்பட்ட ஆர்வத்தால் சிறப்பு வகுப்புகள் நடத்தும் ஆசிரியர்கள் எண்ணிக்கை அதிகரிக்க வேண்டும். ஆசிரியர்கள், பெற்றோர் - ஆசிரியர் கழகம், பள்ளி மேலாண்மைக் குழு பொறுப்பாளர்கள் பள்ளிகள் நலனில் அக்கறை காட்டுவதோடு தங்கள் குழந்தைகளை அரசுப் பள்ளிகளில் சேர்த்து மற்றவர்களுக்கு முன்னுதாரணமாக இருக்க வேண்டும்.

# ஜி20 தலைமைப் பொறுப்பு பிரேஸிலிடம் ஒப்படைப்பு

## தில்லி உச்சி மாநாடு நிறைவு

**புது தில்லி, செப். 10:** தில்லியில் நடைபெற்ற ஜி20 உச்சி மாநாடு ஞாயிற்றுக்கிழமை நிறைவடைந்த நிலையில், அக்கூட்டமைப்பின் தலைமைப் பொறுப்பானது பிரேஸிலிடம் ஒப்படைக்கப்பட்டது.

ஜி20 கூட்டமைப்புக்கான தலைமைப் பொறுப்பானது ஆண்டுதோறும் சுழற்சி முறையில் ஒவ்வொரு நாட்டிடம் ஒப்படைக்கப்படும். அதன்படி, அக்கூட்டமைப்பின் தலைமைப் பொறுப்பை இந்தோனேசியாவிடமிருந்து கடந்த ஆண்டு இந்தியா பெற்றது. கடந்த ஆண்டு டிசம்பர் 1-ஆம் தேதியில் இருந்து இந்தியா அதிகாரபூர்வமாக ஜி20 கூட்டமைப்புக்குத் தலைமை வகித்து வருகிறது.

கடந்த 10 மாதங்களில் நாட்டின் பல்வேறு பகுதிகளில் 200-க்கும் அதிகமான ஜி20 கூட்டங்களை இந்தியா நடத்தியது. ஜி20 கூட்டமைப்பு நாடுகளின் தலைவர்களுக்கான உச்சி மாநாடு தில்லியில் சனிக்கிழமை தொடங்கியது. மொத்தம் 3 அமர்வுகளாக நடைபெற்ற மாநாடு, ஞாயிற்றுக்கிழமை நிறைவடைந்தது.

அதையடுத்து, ஜி20 கூட்டமைப்பின் தலைமைப் பொறுப்பை பிரேஸில் அதிபர் லூலா டாசில்வாவிடம் பிரதமர் நரேந்திர மோடி ஒப்படைத்தார். வரும் டிசம்பர் 1-ஆம் தேதியில் இருந்து ஜி20 கூட்டமைப்பின் தலைமைப் பொறுப்பை பிரேஸில் அதிகாரபூர்வமாக ஏற்கும்.

இது தொடர்பாக ஜி20 உச்சி மாநாட்டின் இறுதி அமர்வில் பிரதமர் மோடி கூறுகையில், 'ஜி20 கூட்டமைப்பின் தலைமைப் பொறுப்பை பிரேஸிலிடம் இந்தியா ஒப்படைத்துள்ளது. சர்வதேச ஒற்றுமையையும் வளர்ச்சியையும் உறுதி செய்வதோடு மட்டுமல்லாமல் அர்ப்பணிப்புடனும் தொலைநோக்குடனும் ஜி20 கூட்டமைப்பை பிரேஸில் வழிநடத்தும் என நம்புகிறோம்.

தனது தலைமையில் ஜி20 கூட்டமைப்பின் இலக்குகளை அடைவதற்கு பிரேஸில் வழிகாட்டும். அந்நாட்டுக்குத் தேவையான ஆதரவை இந்தியா தொடர்ந்து வழங்கும்.

**நவம்பரில் காணொலி அமர்வு:** கடந்த இரு நாள்களாகப் பல்வேறு விவகாரங்கள் தொடர்பான கருத்துகளை உலகத் தலைவர்கள் தில்லி மாநாட்டில் எடுத்துரைத்தனர். பல்வேறு பரிந்துரைகளும் வழங்கப்பட்டன. அந்தப் பரிந்துரைகளை அமல்படுத்துவதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டியது இந்தியாவின் பொறுப்பு. இந்தியாவின் ஜி20 தலைமைப் பொறுப்பு மேலும் இரண்டரை மாதங்களுக்கு நீடிக்கவுள்ளது.



ஜி20 தலைமைப் பொறுப்பை பிரேஸில் அதிபர் லூலா டாசில்வாவிடம் ஞாயிற்றுக்கிழமை ஒப்படைத்த பிரதமர் நரேந்திர மோடி.

இந்தியாவின் தலைமையிலான ஜி20 மாநாட்டின் ஒரு பகுதியாக மற்றோர் அமர்வை நவம்பர் இறுதியில் காணொலி வாயிலாக நடத்துவதற்கான பரிந்துரையை முன்மொழிகிறேன். இந்த உச்சி மாநாட்டில் எடுக்கப்பட்ட முடிவுகளின் அமலாக்கம் குறித்து அந்தக் காணொலி அமர்வில் ஆய்வுசெய்யலாம். அந்த அமர்வு தொடர்பான விவரங்கள் விரைவில் பகிர்ந்துகொள்ளப்படும். அதில் அனைத்து நாடுகளும் பங்கேற்கும் என நம்புகிறேன். இத்துடன் ஜி20 தில்லி உச்சி மாநாடு நிறைவடைவதாக அறிவிக்கிறேன்' என்றார்.

**ரியோ டி ஜெனிரோவில் அடுத்த மாநாடு:** ஜி20 கூட்டமைப்பின் தலைமைப் பொறுப்பை ஏற்றபிறகு பிரேஸில் அதிபர் லூலா டாசில்வா கூறுகையில், 'வளரும் பொருளாதார நாடுகள் சந்தித்து வரும் பிரச்னைகளுக்கு தில்லி உச்சி மாநாட்டில் முக்கியத்துவம் அளித்ததற்காக இந்தியாவுக்கும் பிரதமர் மோடிக்கும் பாராட்டு தெரிவிக்கிறேன்.

ஜி20 நாடுகள் இடையே பிரிவினை ஏற்படக் கூடாது. உலகம் சந்தித்து வரும் சவால்களுக்கு அனைத்து நாடுகளும் ஒருங்கிணைந்தால் மட்டுமே தீர்வு காண முடியும். போருக்குப் பதிலாக அமைதியும் ஒத்துழைப்புமே தற்போதைய தேவை. பிரேஸிலின் ஜி20 தலைமைப் பொறுப்பின் கீழ் சமூக ஒருங்கிணைப்பு, பட்டினி ஒழிப்பு நடவடிக்கைகள், பசுமை எரிசக்தி உற்பத்தி, நிலையான வளர்ச்சி உள்ளிட்டவற்றுக்கு முக்கியத்துவம் அளிக்கப்படும்.

வளரும் நாடுகள் ஐ.நா. பாதுகாப்பு கவுன்சிலின் உறுப்பினர்களாக இணைக்கப்பட வேண்டும். உலக வங்கி, சர்வதேச நிதியம் (ஐஎம்எஃப்) போன்ற பன்னாட்டு அமைப்புகளிலும் வளரும் நாடுகளுக்கு அதிக பிரதிநிதித்துவம் அளிக்கப்பட வேண்டும்' என்றார்.

ஜி20 கூட்டமைப்பின் அடுத்த உச்சி மாநாடு பிரேஸிலின் ரியோ டி ஜெனிரோ நகரில் 2024-ஆம் ஆண்டு நவம்பரில் நடைபெறவுள்ளது.

## மரக்கன்றுகள் நடவு

ஜி20 உச்சி மாநாடு நடைபெற்றதைக் குறிக்கும் வகையில் தில்லியின் பாரத் மண்டப வளாகத்தில் மரக்கன்றுகள் நடப்பட்டன. ஜி20 கூட்டமைப்பின் கடந்த ஆண்டுக்கான தலைமைப் பொறுப்பை வகித்த இந்தோனேசிய அதிபர் ஜோகோ விடோடோ, அடுத்த ஆண்டுக்கான தலைமைப் பொறுப்பை வகிக்கவுள்ள பிரேஸில் அதிபர் லாலா டாசில்வா ஆகியோர் தங்கள் நாட்டில் இருந்து கொண்டுவரப்பட்ட மரக்கன்றுகளைப் பிரதமர் மோடியிடம் வழங்கினர். அந்த மரக்கன்றுகள் மாநாட்டு வளாகத்தில் நடப்பட்டதாக வெளியுறவுத் துறை செய்தித் தொடர்பாளர் அரிந்தம் பாக்சி தெரிவித்தார்.

இந்த நிகழ்வில் ஜி20 கூட்டமைப்பு நாடுகளின் தலைவர்கள் வழங்கிய மரக் கன்றுகளும் நடப்பட்டன. அந்தக்கன்றுகள் நடப்பட்ட இடத்தில் ஜி20 தோட்டம் உருவாக்கப்படும் என மத்திய அரசு அதிகாரிகள் தெரிவித்தனர்.

# மொராக்கோ நிலநடுக்கம்: பலி 2,000-ஆக உயர்வு

**மராகெஷ், செப். 10:** மொராக்கோவில் வெள்ளிக்கிழமை ஏற்பட்ட சக்திவாய்ந்த நிலநடுக்கத்தால் உயிரிழந்தோர் எண்ணிக்கை 2,012-ஆக அதிகரித்துள்ளது.

வடமேற்கு ஆப்பிரிக்க நாடான மொராக்கோவின் அட்லஸ் மலைத் தொடர் பகுதியில் அமைந்துள்ள மராகெஷ்-சாஃபி பிராந்தியத்தில் வெள்ளிக்கிழமை இரவு சக்திவாய்ந்த நிலநடுக்கம் ஏற்பட்டது.

இந்த நிலநடுக்கம் ரிக்டர் அளவுகோலில் 7.2 அலகுகளாகப் பதிவானதாக மொராக்கோ நிலநடுக்கவியல் ஆய்வு மையம் தெரிவித்தது. நிலநடுக்கத்தின் அதிர்வுகள் ஸ்பெயின், போர்ச்சுகல், அல்ஜீரியா உள்ளிட்ட அண்டை நாடுகளிலும் உணரப்பட்டன.

வடக்கு ஆப்பிரிக்க நாடுகளில் கடந்த 120 ஆண்டுகளில் ஏற்பட்ட சக்திவாய்ந்த நிலநடுக்கம் இது என அறியப்படுகிறது. இந்த நிலநடுக்கத்தின் அதிர்வுகளால் மராகெஷ்-சாஃபி பிராந்தியத்தில் பல்வேறு கட்டடங்கள் இடிந்து விழுந்தன.

**பலி எண்ணிக்கை 2,000:** சனிக்கிழமை இரவு நிலவரப்படி, நிலநடுக்கத்தால் 2012 பேர் உயிரிழந்திருப்பதாக அந்நாட்டு உள்துறை அமைச்சகம் தெரிவித்தது. அதிகபட்சமாக அல் ஹௌஸ் மாகாணத்தில் 1,293 பேரும், தரௌடந்த் மாகாணத்தில் 452 பேரும் உயிரிழந்தனர். மேலும், 2,059-க்கும் மேற்பட்டோர் காயமடைந்துள்ளனர். இவர்களில் 1,404 பேரின் நிலைமை கவலைக்கிடமாக உள்ளது.

கட்டட இடிபாடுகளில் சிக்கியிருப்பவர்களையும், பலியானவர்களின் சடலங்களையும் மீட்கும் பணிகள் தொடர்ந்து நடைபெற்று வருகின்றன.

எனவே, பலியானவர்கள் மற்றும் காயமடைந்தவர்களின் எண்ணிக்கை மேலும் அதிகரிக்கும் என்று அஞ்சப்படுகிறது.





நிலநடுக்கம் மையம் கொண்டிருந்த மராகெஷுக்கு அருகில் உள்ள 'மௌலே பிராஹிம்' கிராமத்தில் சேதமடைந்த உணவகம். (வலது) நிலநடுக்கத்தால் சேதமடைந்த கட்டடங்கள்.

**சீர்குலைந்த சுற்றுலா கிராமம்:** மராகெஷுக்கு அருகில் 3,000-க்கும் குறைவான மக்கள் வசிக்கும் மலைக் கிராமமான 'மௌலே பிராஹிம்', அதன் அற்புதமான இயற்கைக் காட்சிகளால் சுற்றுலாப் பயணிகளை வெகுவாக ஈர்க்கும் தலமாக இருந்து வந்தது. நிலநடுக்கத்தால் இந்தக் கிராமம் முற்றிலும் பாதிக்கப்பட்டுள்ளது. சிறிய உணவகங்களால் நிறைந்த இக்கிராமத்தின் தெருக்களில் சுற்றுலாப் பயணிகள் தஞ்சம் அடைந்துள்ளனர்.

**நீளும் உதவிக்கரங்கள்...:** நிலநடுக்கத்தால் பாதிக்கப்பட்டுள்ள மொராக்கோ மக்களுக்கு உதவிக் கரம் அளிக்க மற்றும் மீட்புப் பணிகளுக்காக தங்களது குழுவினரை அனுப்ப அமெரிக்கா, துருக்கி, பிரான்ஸ், ஜெர்மனி, கத்தார் உள்ளிட்ட பல நாடுகள் முன்வந்துள்ளன.

மொராக்கோவுக்குத் தேவையான மனிதாபிமான உதவிகளை வழங்க தயாராகுமாறு இஸ்ரேல் ராணுவத்துக்கு அந்நாட்டு பாதுகாப்பு அமைச்சகம் உத்தரவிட்டுள்ளது.

ராஜீய உறவில் ஏற்பட்ட விரிசலைத் தொடர்ந்து மூடப்பட்டிருந்த வான்வெளியை, மருத்துவ மற்றும் அவசரத் தேவைகளுக்காக மொராக்கோ விமானங்கள் பயன்படுத்திக் கொள்ள அண்டை நாடான அல்ஜீரியா அனுமதித்துள்ளது.

அதேபோல், கட்டட இடிபாடுகளில் சிக்கி காயமடைந்த மக்களுக்குத் தேவையான மருத்துவ உதவியை வழங்க அமெரிக்காவின் 'எல்லையில்லா மருத்துவர்கள்' அமைப்பு உறுதி அளித்துள்ளது.

**இந்தியர்களுக்குப் பாதிப்பில்லை:** பலி எண்ணிக்கை 2,000-ஐ கடந்த நிலையில், தற்போது வரை இந்தியர்கள் யாருக்கும் பாதிப்பில்லை என மொராக்கோவில் அமைந்துள்ள இந்திய தூதரகம் தெரிவித்துள்ளது. மேலும், மொராக்கோவில் வசிக்கும் அனைத்து இந்தியர்களும் உள்ளூர் அதிகாரிகள் வழங்கும் வழிகாட்டுதல்களைப் பின்பற்றி அமைதி காக்குமாறு அறிவுறுத்தப்பட்டுள்ளது.

இந்தியர்கள் தங்களின் அவசரத் தேவைக்கு தூதரகத்தின் உதவி எண் +212 661 297 491-ஐ தொடர்பு கொள்ளலாம் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

முன்னதாக, ஜி20 உச்சி மாநாட்டில் சனிக்கிழமை உரையாற்றிய பிரதமர் நரேந்திர மோடி, மொராக்கோவுக்குத் தேவையான அனைத்து உதவிகளையும் வழங்க இந்தியா தயார் எனத் தெரிவித்திருந்தார்.

**கடந்த 25 ஆண்டுகளில் சக்திவாய்ந்த நிலநடுக்கங்கள்...**

| ஆண்டு | நாடு | ரிக்டர் அளவுகோலில் (அலகுகள்) | பலி எண்ணிக்கை |
|---|---|---|---|
| 1999, ஆக. 17 | துருக்கி | 7.6 | 18,000 |
| 2001, ஜன. 26 | இந்தியா | 7.6 | 20,000 |
| 2003, டிச. 26 | ஈரான் | 6.6 | 20,000 |
| 2004, டிச. 26 | இந்தோனேசியா | 9.1 | 2,30,000 |
| 2005, அக். 8 | பாகிஸ்தான் | 7.6 | 80,000 |
| 2006, மே 27 | இந்தோனேசியா | 6.3 | 5,700 |
| 2008, மே 12 | சீனா | 7.9 | 87,500 |
| 2010, ஜன. 12 | ஹைதி | 7.0 | 1,00,000 |
| 2011, மார்ச் 11 | ஜப்பான் | 9.0 | 18,400 |
| 2015, ஏப். 25 | நேபாளம் | 7.8 | 8,800 |
| 2023, பிப். 6 | துருக்கி- சிரியா | 7.8 | 21,600 |
| 2023, செப். 8 | மொராக்கோ | 7.2 | 2,000 |

(2004, டிச. 26 நிலநடுக்கத்தைத் தொடர்ந்து சுனாமி ஏற்பட்டது)

# ஆதித்யா விண்கலம் சுற்றுப்பாதை தொலைவு அதிகரிப்பு

**சென்னை, செப்.10:** 'ஆதித்யா எல்-1' விண்கலத்தின் சுற்றுப் பாதை தொலைவு மூன்றாவது முறையாக அதிகரிக்கப்பட்டுள்ளதாக இஸ்ரோ அறிவித்துள்ளது.

சூரியனின் புறவெளியை ஆய்வு செய்வதற்காக 'ஆதித்யா எல்-1' எனும் நவீன விண்கலத்தை இஸ்ரோ வடிவமைத்தது.

பிஎஸ்எல்வி சி-57 ராக்கெட் மூலம் ஸ்ரீஹரிகோட்டாவில் இருந்து கடந்த 2-ஆம் தேதி அந்த விண்கலம் விண்ணில் ஏவப்பட்டது. குறைந்தபட்சம் 235 கி.மீ., அதிகபட்சம் 19,500 கி.மீ. தொலைவில் உள்ள புவி நீள்வட்டப் பாதையில் விண்கலம் செலுத்தப்பட்டது. ஏறத்தாழ 125 நாள்கள் பயணத்துக்கு பின்னர் அடுத்த ஆண்டு ஜனவரி தொடக்கத்தில் புவியில் இருந்து 15 லட்சம் கி.மீ. தொலைவில் உள்ள எல்-1 பகுதி அருகே விண்கலம் நிலைநிறுத்தப்பட உள்ளது.

அதற்கேற்ப தற்போது பெங்களூரில் உள்ள இஸ்ரோவின் கட்டுப்பாட்டு மையத்தில் இருந்து விண்கலத்தின் சுற்றுப்பாதையை நீட்டிக்கும் பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

அந்தவகையில் 'ஆதித்யா' விண்கலத்தின் சுற்றுப்பாதை தொலைவு மூன்றாவது முறையாக மாற்றப்பட்டுள்ளதாக இஸ்ரோ தெரிவித்துள்ளது.

இதுதொடர்பாக இஸ்ரோ வெளியிட்ட அறிவிப்பு: 'ஆதித்யா' விண்கலம் புவிக்கு அருகே வரும்போது அதிலுள்ள உந்துவிசை இயக்கப்பட்டு சுற்றுப்பாதைக தொலைவு படிப்படியாக அதிகரிக்கப்பட்டு வருகிறது. அதன்படி விண்கலத்தின் சுற்றுவட்டப்பாதை இது வரை 2 முறை மாற்றப்பட்டுள்ளது. தொடர்ந்து மூன்றாவது முறையாக கடந்த சனிக்கிழமை நள்ளிரவில் விண்கலத்தின் சுற்றுப்பாதை தொலைவு அதிகரிக்கப்பட்டது.

இதன் மூலம் குறைந்தபட்சம் 296 கி.மீ தொலைவும், அதிகபட்சம் 71,767 கி.மீ தொலைவும் கொண்ட சுற்றுப்பாதைக்கு விண்கலம் கொண்டு செல்லப்பட்டது. இன்னும் 2 முறை சுற்றுப்பாதை மாற்றப்பட உள்ளது. அதற்கு அடுத்து 'ஆதித்யா'வின் பயணப் பாதை செப்.15-ஆம் தேதி மாற்றி அமைக்கப்படும். அதன் பின்னர் புவி வட்டப் பாதையில் இருந்து விலகி விண்கலம் சூரியனை நோக்கி பயணிக்கும் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.